## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## நான்காம் பத்து

### ஐந்தாம் திருமொழி - தூம்புடை
### திருநாங்கூர்த் திருப்பதி 11
### 8. திருமணிக்கூடம்

** தூம்புடைப் பனைக் கை வேழம் * துயர் கெடுத்து அருளி * மன்னு
காம்புடைக் குன்றம் ஏந்திக் * கடுமழை காத்த எந்தை **
பூம்புனல் பொன்னி முற்றும் * புகுந்து பொன் வரண்ட * எங்கும்
தேம்பொழில் கமழும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 1

கவ்வை வாள் எயிற்று வன்பேய் * கதிர் முலை சுவைத்து * இலங்கை
வவ்விய இடும்பை கூரக் * கடுங்கணை துரந்த எந்தை **
கொவ்வை வாய் மகளிர் கொங்கைக் * குங்குமம் கழுவிப் போந்த *
தெய்வ நீர் கமழும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 2

மாத் தொழில் மடங்கச் செற்று * மறுதிற நடந்து * வன்தாள்
சேத் தொழில் சிதைத்துப் * பின்னை செவ்வித் தோள் புணர்ந்த எந்தை **
நாத் தொழில் மறை வல்லார்கள் * நயந்து அறம் பயந்த * வண்கைத்
தீத் தொழில் பயிலும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 3

தாங்க அரும்சினத்து வந்தாள் * தடக்கை மா மருப்பு வாங்கி *
பூங்குருந்து ஒசித்துப் புள்வாய் பிளந்து * எருதடர்த்த எந்தை **
மாங்கனி நுகர்ந்த மந்தி * வந்து வண்டு இரிய * வாழைத்
தீங்கனி நுகரும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 4

கருமகள் இலங்கையாட்டி * பிலங்கொள் வாய் திறந்து * தன் மேல்
வருமவள் செவியும் மூக்கும் * வாளினால் தடிந்த எந்தை **
பெருமகள் பேதை மங்கை * தன்னொடும் பிரிவிலாத *
திருமகள் மருவு நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 5

கெண்டையும் குறளும் புள்ளும் * கேழலும் அரியும் மாவும் *
அண்டமும் சுடரும் * அல்லா ஆற்றலும் ஆய எந்தை **
ஒண்திறல் தென்னன் ஓட * வடவரசு ஓட்டம் கண்ட *
திண்திறலாளர் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 6

குன்றமும் வானும் மண்ணும் * குளிர் புனல் திங்களோடு *
நின்ற வெஞ்சுடரும் * அல்லா நிலைகளும் ஆய எந்தை **
மன்றவும் வயலும் காவும் * மாடமும் மணம் கொண்டு * எங்கும்
தென்றல் வந்துலவும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 7

சங்கையும் துணிவும் பொய்யும் * மெய்யும் இத்தரணி ஓம்பும் *
பொங்கிய முகிலும் * அல்லாப் பொருள்களும் ஆய எந்தை **
பங்கயம் உகுத்த தேறல் * பருகிய வாளை பாய *
செங்கயல் உகளும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 8

பாவமும் அறமும் வீடும் * இன்பமும் துன்பம் தானும் *
கோவமும் அருளும் * அல்லாக் குணங்களும் ஆய எந்தை **
மூவரில் எங்கள் மூர்த்தி * இவன் என முனிவரோடு *
தேவர் வந்து இறைஞ்சும் நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானே 9

** திங்கள் தோய் மாட நாங்கூர்த் * திருமணிக்கூடத்தானை *
மங்கையர் தலைவன் வண்தார்க் * கலியன் வாயொலிகள் வல்லார் **
பொங்கு நீர் உலகம் ஆண்டு * பொன்னுலகாண்டு * பின்னும்
வெங்கதிர்ப் பரிதி வட்டத்து * ஊடு போய் விளங்குவாரே 10

**அடிவரவு:** தூம்பு கவ்வை மாத்தொழில் தாங்கரும் கருமகள் கெண்டை குன்றம் சங்கை பாவம் திங்கள் தாவளந்து

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---